திருப்பூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு எஸ்.மனோகரன், எம்.எஸ்ஸி(விவ).,

செ.மு.ஆ.மூ.மு.எண் : அ2/2467/2019

நாள்:14.01.2020

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - பணிநியமனம் - தொகுதி IV - ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வின் மூலம் 2015 -16, 2016- 17 மற்றும் 2017-18-ம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்து வேளாண்மைதுறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணியினை வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்:1012/PSD-G2/2019, நாள்:20.02.2019.
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணிமேலாண்மை) அவர்களின் செ.மு.ஆ.எண்: அநிபி5/7551/2019, நாள்: 01.03.2019.
3. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்: அ2/2467/2019, நாள்: 04.03.2019 மற்றும் 05.03.2019.

--------

பார்வை (1)ல் காணும் அரசுக் கடிதம் மற்றும் (2) & (3)ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து, பார்வை(2)ல் காணும் செயல்முறை ஆணையில் வழங்கிய வழிகாட்டுதலின்படி, 2015 -16, 2016- 17 மற்றும் 2017 -18 ம் ஆண்டு தொகுதி 4ல் அடங்கிய பணிகளுக்கு நேரடி போட்டித் தேர்வு மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தட்டச்சர் பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்து வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ்வலுவலக கட்டுப்பாட்டில் தட்டச்சர் பதவியில் தற்காலிகமாக முதன்முதலாக அரசுப்பணியில் சேர்ந்து கொண்டுள்ள கீழ்க்கண்ட பணியாளர்களின் பணியினை பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பட்டியல் வ.எண்/ பதிவெண் | பெயர் / பதவி திருவாளர்கள் | பணியேற்ற அலுவலகம் | பணிசேர் நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 39 / 060125236 | ரா.கனிமொழி, தட்டச்சர் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பல்லடம் | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |
| 2 | 48 / 060414014 | ப.கலையரசி, தட்டச்சர் | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், திருப்பூர் | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |
| 3 | 115 / 060104148 | ர.கங்காபரமேஸ்வரி தட்டச்சர் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வெள்ளகோவில் | 07.03.2019 முற்பகல் | 07.03.2019 முற்பகல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 117<br>320304256 | ப.உமாமகேஸ்வரி<br>தட்டச்சர் | வேளாண்மை<br>உதவி இயக்குநர்<br>அலுவலகம்,<br>மடத்துக்குளம் | 06.03.2019<br>முற்பகல் | 06.03.2019<br>முற்பகல் |
| 5 | 135<br>060811184 | தெ.பிரியங்கா,<br>தட்டச்சர் | வேளாண்மை<br>உதவி இயக்குநர்<br>அலுவலகம்,<br>தாராபுரம் | 06.03.2019<br>முற்பகல் | 06.03.2019<br>முற்பகல் |
| 6 | 147<br>060416358 | க.சாந்தி,<br>தட்டச்சர் | வேளாண்மை<br>உதவி இயக்குநர்<br>அலுவலகம்,<br>பொங்கலூர் | 06.03.2019<br>முற்பகல் | 06.03.2019<br>முற்பகல் |
| 7 | 149<br>320723067 | கா.கல்யாணி,<br>தட்டச்சர் | வேளாண்மை<br>உதவி இயக்குநர்<br>அலுவலகம்,<br>உடுமலைப்பேட்டை | 07.03.2019<br>முற்பகல் | 07.03.2019<br>முற்பகல் |

2) இப்பணி வரன்முறை சென்னை உயர்நீதிமன்ற சென்னை/மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

This Regularization is subject to the outcome of the W.P.'s pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination-IV for the year 2015 -16, 2016- 17 and 2017 -18 recruitment.)

3) மேற்காணும் பணியாளர்கள் தட்டச்சர் பதவியில் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தினை, மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். "COMPUTER ON OFFICE AUTOMATION" தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னரே தட்டச்சர் பதவியில் தகுதி காண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படும். அதனைத் தொடர்ந்தே இப்பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார்கள்.

(ஒம்)/- எஸ். மனோகரன்,
வேளாண்மை இணை இயக்குநர்
திருப்பூர்.

பெறுநர் :
மேற்காண் பணியாளர்கள்
வழி மற்றும் நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், பல்லடம்,வெள்ளகோவில்,மடத்துக்குளம், தாராபுரம், பொங்கலூர் மற்றும் உடுமலைப்பேட்டடை.
நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : வேளாண்மை இணை இயக்குநர் மேசைக்கு
நகல் : ஆட்சி அலுவலர் மேசைக்கு
நகல் : இருப்புக் கோப்பு/பணிப்பதிவேடு
உபரி:1

/ஆணைப்படி/

கண்காணிப்பாளர்.